# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 331/2022**

Prosecution witness : **1**

| | | | |
|---|---|---|---|
| Name: | விஜயஅனிதா | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 12.09.2024**

A1- A4 produced. A5 absent. Petition U/s 355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை**:

நான் தற்போது தூத்துக்குடி கியூபிரிவு குற்றப்புலனாய்வு துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.10.2021 ம் தேதி காலை 3.15 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது எனது தொலைபேசிக்கு ரகசிய தகவலாளர் அழைத்து காலை 4.30 மணிக்கு தருவைக்குளம், சந்தியாகப்பர் கோவில் முனை கடற்கரைக்கு வந்தால் இலங்கைக்கு கஞ்சா கடத்தும் கும்பலைப்பிடிக்கலாம் என தகவல் தெரிவித்தார். (எதிரிகள் தரப்பில் சாட்சியின் வாக்கு மூலத்திலோ வேறு எந்த ஆவணத்திலோ இலங்கைக்கு கஞ்சா கடத்துவதாக குறிப்பு இல்லை என்பதாகவும் எனவே இதைப்பதிவு செய்யக்கூடாது எனவும் ஆட்சேபிக்கப்பட்டது) அவர் தெரிவித்த தகவலை உயர்அதிகாரிக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தும், அனுமதி பெற்றும், NDPS ACT 42(2)ன்

படி அறிக்கை தயார் செய்து அதனை உயர் அதிகாரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பியும், தருகைக்குளம் கிராம நிர்வாக அதிகாரி திரு.ராஜன் மற்றும் கிராம உதவியாளர்-பொன்னுச்சாமி ஆகியோர்களுக்கு தருவைகுளம் சந்தியாகப்பர் கோவில் முன்னர் உள்ள கடற்கரைக்கு வரச்சொல்லி தகவல் தெரிவித்தும் என்னுடன் பணிபுரியும் உதவி ஆய்வாளர்கள் ஜீவமணிதர்மராஜ், வில்லியம் பெஞ்சமின், செல்வக்குமார், கந்தசாமி ஆகியோருக்கு மேற்படி சந்தியாகப்பர் கோவில் முன்னர் வரச்சொல்லி தகவல் தெரிவித்தேன். மேலும் என்னுடன் பணிபுரியும் தலைமைக்காவலர்கள் ராமர் மற்றும் இருதய ராஜ்குமார், சங்கர் ஆகியோருடன் அலுவலகத்திலிருந்து 3.35 மணிக்கு புறப்பட்டேன். சம்பவ இடத்திற்கு 4.15 மணிக்கு நான் சென்றபோது அங்கு ஏற்கனவே ஆஜரில் இருந்த கிராமநிர்வாக அலுவலர் ராஜன் மற்றும் அவரது உதவியாளர் ஆஜரில் இருந்தனர். மேலும் என்னுடன் பணிபுரியும் உதவி ஆய்வாளர் ஆஜரில் இருந்தனர். 4.15 முதல் கடற்கரை கண்காணிப்பு பணியில் ஈடுபட்டபோது மேற்படி சந்தியாகப்பர் கோவில் முன்பாக உள்ள கடற்கரையில் நீலநிற வள்ளம் (D.பெரில்) IND- TN-12-MO-2665 என்ற எண்ணுள்ள) ஒன்று நின்றுகொண்டிருந்தது. சந்தேகத்தின் பேரில் அதனுள் ஏறி பார்த்தபோது அதனுள் இருந்த நபர்கள் எங்களை கண்டவுடன் படகிலிருந்து வெளியே ஏறி குதிக்க முயற்சித்தபோது போலீஸ் சகிதம் அவர்களை பிடித்தோம். அவர்களிடம் நானும் என்னுடன் இருந்தவர்களும் எங்கள் அடையாள அட்டையை காண்பித்து நாங்கள் யார் என தெரியப்படுத்தினோம். கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் அவர்களது அடையாள அட்டையை காண்பித்து தங்களை அறிமுகம் செய்துகொண்டார்கள். அதில் பின்னர் பெயர் விபரம் கேட்டு தெரிந்துகொண்ட நபர்களான 1.தூத்துக்குடி திரேஸ்புரத்தை சேர்ந்த அந்தோணிப்பிச்சை மற்றும் திரேஸ்புரத்தை சேர்ந்த லெனின்ஸ்டன், தூத்துக்குடி, S.S.மாணிக்கபுரத்தை சேர்ந்த ஜெயஸ்டன்

மற்றும் இராமநாதபுரம் தங்கச்சிமடத்தை சேர்ந்த செல்வராஜ் என தெரியவந்தது. திரேஸ்புரத்தை சேர்ந்த அந்தோணிப்பிச்சையை விசாரித்தபோது அவர் தங்களுடைய படகில் இலங்கைக்கு கொண்டு செல்வதற்காக கஞ்சா மூடைகள் வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரிடம் பிரிவு 50ன் படி தங்களை சோதனை செய்ய அருகில் இருக்கும் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ, அருகில் உள்ள நீதித்துறை நடுவர் அவர்களிடமோ அழைத்து சென்று சோதனை செய்யசொல்ல தங்களுக்கு சட்டத்தின் படி உரிமை உள்ளது என்பதை அவர்களுக்கு தெரிவித்தேன். அதனை நான் கொண்டுசென்றிருந்த மடிக்கணினியில் தட்டச்சு செய்து அதனை படித்து காண்பித்தேன். அவர் தாங்களே என்னை சோதனை செய்யலாம் என தெரிவித்தார். பின்னர் அவர் தன்னிடமிருந்த நீலநிற ரெட்மீநோட் கைபேசியையும் கருப்பு நிற லாவா ஏ1, கைபேசியையும் என்னிடம் அவராகவே எடுத்து ஆஜர் செய்தார். அதேபோன்று லெனின்ஸ்டன், ஜெயஸ்டன், செல்வராஜ் ஆகியோருக்கு அவர்களது உரிமையை எடுத்து கூறி சோதனை செய்ய கேட்டபோது அவர்கள் தாங்களே எங்களை சோதனை செய்து கொள்ளலாம் என தெரிவித்தனர். மேற்படி செல்வராஜ் என்பவர் தன்னிடமிருந்த நீலநிற Poco-c3 கைபேசியை என்னிடம் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி 50 NDPS அறிக்கையில் அந்தோணிப்பிச்சை மற்றும் கிராம உதவி அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஆகிய இருவரும் கையொப்பம் செய்தார்கள். நானும் அதில் கையொப்பம் செய்தேன். பின்னர் மேற்படி வள்ளத்திலிருந்த வெள்ளை நிற சாக்கு மூடை 15 எண்ணம் காணப்பட்டது. அதனை ஒவ்வொன்றாக பிரித்து பார்த்தபோது அதனுள் கஞ்சா வாசனையுடன் பூ,காய்,விதைகளுடன் கூடிய கரும்பச்சை நிறத்தில் கஞ்சா காணப்பட்டது. மேற்படி மூடைகளை அருகில் இருந்த மீன் ஏலக்கூடத்திற்கு ஏத்தி சென்று கிராமநிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் முன்னிலையில் அங்கிருந்த எலக்ட்ரானிக் தராசில்

எடைபார்த்தபோது முதல் மூடையில் 35 கிலோ 500 கிராம் எடையிலும், இரண்டாவது மூடையில் 39 கிலோ 500 கிராம் எடையிலான உலர் கஞ்சா காணப்பட்டது. மூன்றாவது மூடையில் 35 கிலோகிராம் எடையிலும், நான்காவது மூடையில் 35 கிலோகிராம் எடையிலும் , ஐந்தாவது மூடையில் 35 கிலோ 500 கிராம் எடையிலும், ஆறாவது மூடையில் 35 கிலோகிராம், ஏழாவது மூடையில் 35 கிலோகிராம், எட்டாவது மூடையில் 35 கிலோகிராம் , ஒன்பதாவது மூடையில் 39 கிலோ 500 கிராம் எடையிலும், பத்தாவது மூடையில் 40 கிலோகிராம் எடையிலும் , பதினொன்னாவது மூடையில் 35 கிலோகிராம் எடையிலும், பன்னிரெண்டாவது மூடையில் 30 கிலோகிராம் எடையிலும், பதிமூன்றாவது மூடையில் 35 கிலோகிராம் எடையிலும், பதிநான்காவது மூடையில் 30 கிலோகிராம் எடையிலும், பதினைந்தாவது மூடையில் 30 கிலோகிராம் எடையிலும் ஆக மொத்தம் 530 கிலோகிராம் அளவிலான உலர் கஞ்சா காணப்பட்டது.அதனை 5.30 மணி முதல் 6.30 மணி வரை சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். மேலும் மேற்படி அந்தோணிபிச்சை மற்றும் செல்வராஜ் ஆஜர் செய்த மூன்று கைபேசிகளையும் மற்றும் அந்தோணிப்பிச்சைக்கு சொந்தமான நீலநிற வள்ளம் (**IND – TN – MO**-12-2669) சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்னர் மேற்படி கைப்பற்றப்பட்ட 15 மூடைகள். கைபேசிகள் மற்றும் பிடித்த மேற்படி நான்கு நபர்கள் உட்பட எனது தனி அறிக்கை மற்றும் **NDPS ACT** 50, 57 மற்றும் 42-ன் படியான அறிக்கைகள் தயார் செய்து மேல் நடவடிக்கைக்காக துாத்துக்குடி போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார். ரகசிய தகவல் **அ.சா.ஆ.1** ஆகும். சோதனை சம்மத கடிதம் **அ.சா.ஆ.2** ஆகும். அத்தாட்சி **அ.சா.ஆ.3** ஆகும். தனி அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும். பிரிவு 57 ன் படியான விரிவான அறிக்கை **அ.சா.ஆ.5**

ஆகும்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கியூபிரிவு என்பது தீவிரவாதங்களை கண்காணிப்பதும் உள்நாட்டு பாதுகாப்பிற்கான தகவல்களை சேகரிப்பதற்கான பணியாகும். எங்களுக்கு வழக்கு பதிவதற்கான அதிகாரம் உண்டா என்றால் உண்டு. எங்கள் அலுவலகம் தூத்துக்குடி நகரில் உள்ளது என்றால் கோரம்பள்ளத்தில் உள்ளது போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு அலுவலகம் தூத்துக்குடி நகரில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் காவல் நிலையத்தில் தொலைபேசி மற்றும் VHF வசதி உண்டு என்றால் தொலைபேசி வசதி மட்டுமே உள்ளது VHF வசதி கிடையாது. கியூபிரிவில் பணிபுரியும் நபர்களது விபரங்கள் அரசால் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். தனிஅறிக்கையில் தகவல் கிடைத்த நேரம் அதிகாலை 4.30 மணி என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு ரகசிய தகவல் 3.15 மணிக்கு கிடைத்தாக தற்போது கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு கீழே சார்பு ஆய்வாளர்கள், தலைமைக்காவலர்கள், எனக்கு மேலே துணைக் கண்காணிப்பளரும், கண்காணிப்பாளரும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் என் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியதாக சொல்லப்படும் மின்னஞ்சல் எனது தனிப்பட்ட ID மின்னஞ்சலிலிருந்து கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அலுவலக மின்னஞ்சல் முகவரி யிலிருந்து அனுப்பப்பட்டது. போதை நுண்ணறிவுப்பிரிவு ஆய்வாளர் விசாரணையின் போது அந்த மின்னஞ்சல் விபரத்தை நான் சொல்லவில்லை என்றாலும் அதுசம்பந்தமாக மின்னஞ்சலை பதிவிறக்கம் செய்து அவரிடம் ஒப்படைக்கவில்லை என்றாலும் சரியல்ல. எங்கள் அலுவலகத்திலிருந்து சம்பவஇடமாக சொல்லப்பட்டுள்ள பகுதி சுமார் 22 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் 22 முதல் 25 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும். கிராமநிர்வாக அலுவலருக்கு நான் தகவல் கொடுத்து நான் சம்பவ இடமாக

சொல்லப்படும் இடத்திற்கு வரச்சொன்னதாக எனது வாக்குமூலத்திலோ, தனி அறிக்கையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில், நேரத்தில் மின்னஞ்சல் எதுவும் அனுப்பவில்லை என்றாலும் அதை நுண்ணறிவுப்பிரிவு ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.கிராம நிர்வாக அலவலரையும், கிராம உதவியாளரையும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வரச்சொன்னதாக வழக்கிற்காக தற்போது சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது நேரடி உயர் அதிகாரி உதவி கண்காணிப்பாளர் என்றால் சரியல்ல துணை கண்காணிப்பாளர். NDPS ACT 42ன் படியான அறிக்கையை எனது நேரடி அதிகாரியிடம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. அவர் எனது மாவட்டத்திற்கு என தனியாக துணைக்காணிப்பாளர் இல்லை, இராமநாதபுரம் கியூ பிரிவு சரகத்திற்கு உள்ளான துணைக்கண்காணிப்பாளர் எனது நேரடி அதிகாரியாவார். அவர் வேறு ஒரு ரகசிய பணியில் இருந்ததால் அவரை தொலைபேசியில் தொடர்பு கொள்ளஇயலாத காரணத்தாலும் எனது உயர் அதிகாரியான சென்னை கியூ பிரிவு காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் தகவல் தெரிவித்தும், 42ன் படியான அறிக்கையை அனுப்பியும் அனுமதி பெற்றேன். மேலே சொன்ன விபரத்தை எனது விசாரணையிலோ, தனி அறிக்கையிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனது நேரடி உயர் அதிகாரியிடம் நான் சட்டப்படி தெரிவிக்கவேண்டிய தகவலை தெரிவிக்காத காரணத்தால் தற்பொழுது அதை மறைப்பதற்காக இந்த நீதிமன்றத்தில் முதன்முறையாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 42ன் படியான தகவல் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது, அது எத்தனை மணிக்கு அனுப்பப்பட்டது என்ற விபரம் இல்லை என்றால் சரிதான். அந்த அறிக்கையை யாருக்கு அனுப்பப்பட்டது என்ற தகவல் இடம் பெறவில்லை என்றால் சரிதான். அதேபோல் அதை யார் பெற்றுக் கொண்டார்கள் என்ற தகவலும் அ.சா.ஆ.1ல் இல்லை என்றால் சரிதான்.

அ.சா.ஆ.1 ஆவணம் **NDPS ACT** பிரிவு 42(2)ன் படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ல் எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவல் நம்பத்தகுந்தது எனவும் அப்படி ஒரு சம்பவம் நடந்திருக்க வாய்ப்பு உள்ளது என்ற ஊர்ஜிதம் குறித்தும் எந்த ஒரு பதிவையும் ஆவணத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல. போதைப்பொருள் தடுப்புபிரிவின் வழிகாட்டுதல்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இதுபோன்ற சம்பவங்களை தடுப்பதற்காக அல்லது பிடிப்பதற்காக போகும்போது அருகாமையில் உள்ள நீதித்துறை நடுவர் அவர்களிடம் முன்னனுமதி பெறவேண்டும் என்றால் சரிதான். ஆனால் நான் எனது உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்று சென்றிருந்தேன். நீதித்துறை நடுவர் அவர்களிடம் முன்னனுமதி பெறாமல் இந்த வழக்கின் அவசரத்தையும் அத்தியாவசித்தையும் என்னுடைய மேல்அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திவிட்டு செல்லவேண்டும் என்றால் சரிதான். அறிக்கை அனுப்பவில்லை தொலைபேசியில் தெரிவித்தேன். சூரிய அஸ்தமனத்திற்கும் சூரிய உதயத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் குறித்து ஆய்வு செய்ய செல்வதற்கு வழிமுறைகளும், போதைப்பொருள் தடுப்புபிரிவு சட்டப்படியும் விதிமுறைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த விதிமுறைகள் குறித்து கூறமுடியுமா என்றால் உயர்அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று போகவேண்டும் என்று மட்டும் தான் எனக்கு தெரியும். பிற விபரங்கள் தெரியாது. சம்பவம் குறித்து ஆய்வு செய்ய சென்ற நேரம் சூரிய உதயத்திற்கு முன்பு என்றால் சரிதான். சூரிய உதயத்திற்கு முன்னர் செல்லும்போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை கடைப்பிடிக்க வில்லை என்றால் சரியல்ல. நாங்கள் காவல்நிலையத்திலிருந்து அரசால் வழங்கப்பட்ட வாகனத்தில் நான் மற்றும் என்னுடன் தலைமைக்காவலர்கள்-சங்கர்,ராமர், இருதய ராஜ்குமார் ஆகியோரும் மேலே கூறப்பட்டுள்ள உதவி ஆய்வாளர்கள் அவர்களது இருசக்கரவாகனத்தில் சம்பவ இடத்திற்கு

வந்திருந்தார்கள். மடிக்கணினி, சோதனை விளக்கு, பேட்டரியால் செயல்படும் பிரிண்டர் மற்றும் தேவையான உபகரணங்கள் கொண்டு சென்றோம். வேறு எதுவும் கொண்டுசெல்லவில்லை என்று சொன்னால் சரிதான். போதைப்பொருள் பகுப்பாய்வு செய்யும் நிபுணர்கள் யாரையும் அழைத்து செல்லவில்லை. எனது வாக்குமூலத்திலோ, எனது தனி அறிக்கையிலோ இலங்கைக்கு கடத்துவதாக வைத்திருந்தார்கள் என்ற விபரத்தை சொல்லியுள்ளார்கள் என்றால் இல்லை. பிரிவு 57 ன் படி தாக்கல் செய்த அறிக்கையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அன்று நாங்கள் அனைவரும் சீருடையில் செல்லவில்லை. போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு ஆய்வாளருக்கோ இவ்வாறு ஒரு தகவல் வந்துள்ளது என்று தெரிவித்தேனா என்றால் இல்லை. தருவைக்குளத்தில் காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். அது கடற்கரையிலிருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் தான் உள்ளது என்றால் சரிதான். தருவைக்குளம் கடல் ஆரம்பிக்கும் இடத்தில் மீன்பிடிப்போர் சங்கம் இருக்கிறது என்றால் சரிதான். அங்கிருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் கடலோர காவல் நிலையம் இருக்குமா என்றால் சுமார் 400 மீட்டர் தொலைவில் உள்ளது. தருவைக்குளம் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத்துடன் சேர்ந்தது என்றால் சரியல்ல. 2021 ம் வருடம் தூத்துக்குடி கிரேஸ்புரத்தினை சேர்ந்தவர் மீனவர்களுக்கும், தருவைக்குளத்தை சேர்ந்த மீனவர்களுக்கும் இடையே மீன்பிடிப்பது தொடர்பாக கலவரம் ஏற்பட்டதன் அடிப்படையில் தனியாக புறக்காவல் நிலையம் அமைக்கப்பட்டது என்றால் சரிதான். எங்களுக்கு கிடைத்த தகவலின் படி வள்ளத்தில் போதைப்பொருள் இருப்பதாக தகவல் கிடைத்த போதும் மீன்வளத்துறையிடம் அந்த வள்ளம் குறித்து தகவல்

தெரிவிக்கப்பட்டதாக என்றால் இல்லை. சந்தியாகப்ப கோவில் பகுதி தருவைக்குளம் பகுதியில் தான் உள்ளது என்றால் சரிதான்.

**நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**